| N–0064 |
|---|

| Sub. Code |
|---|
| 205124 |

**M.A.(Tamil) DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Semester**

கல்வெட்டியல்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. வரலாற்றுச் சோழப் பேரரசால் காலத்தால் முற்பட்டவன்

   (a) விஜயாலயன் (b) குலோத்துங்கன்

   (c) இராசராசன் (d) இராசசேந்திரன்

2. மலையடிக் குறிச்சிக் கல்வெட்டு யாருடைய பழமை பற்றியது?

   (a) சோழர் (b) பல்லவர்

   (c) பாண்டியர் (d) சேரர்

3. சங்க கால நடுகல் அமைந்த 'புலியின் கோம்பை' எம்மாவட்டத்தில் உள்ளது?

   (a) கோவை (b) விழுப்புரம்

   (c) திருச்சி (d) தேனி

4. இராஜகீயம் எத்தனை வகைப்படும்?

(a) 1 (b) 2

(c) 3 (d) 4

5. சாசனம் என்பதன் பொருள் யாது?

(a) உரிமை (b) வழக்கு

(c) கட்டளை (d) போர்

6. 'லலித விஸ்தரம்' என்ற நூலில் எத்தனை வகை எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன?

(a) 64 (b) 32

(c) 16 (d) 30

7. "பிரசஸ்தி" எனக் குறிக்கப்பட்ட மெய்க்கீர்த்திகளுக்கு உரியோர்

(a) பாண்டியர் (b) சோழர்

(c) சேரர் (d) பல்லவர்

8. மெய்க்கீர்த்தியை உண்டாக்கியவன்

(a) கரிகால் சோழன் (b) மகேந்திர வர்மன்

(c) இராசராச சோழன் (d) இராசேந்திர சோழன்

9. மௌரியப் பேரரசை நிறுவியர்

(a) பிந்துசாரண் (b) குமாரகுப்தன்

(c) அசோகர் (d) சந்திர குப்தர்

10. புத்த பாரம்பரியத்தில் 'சண்டாசோகா' என்பது யாரைக் குறிப்பது?

(a) மன்னன் (b) அமைச்சர்

(c) தளபதி (d) வீரன்

11. வஞ்சியன் வேறு பெயர்

(a) பழையாறை (b) கரூர்

(c) நந்திபுரம் (d) காஞ்சி

12. ‘மத்தவிலாசப் பிரகசனம்’ - எழுதியவர்

(a) மகேந்திரவர்மன் (b) நரசிம்மவர்மன்

(c) குலோத்துங்கன் (d) நந்திவர்மன்

13. இந்தியக் கோயில் கல்வெட்டுகளின் அருமை உணர்ந்து ஆராய்ந்தவர்

(a) ஜேம்ஸ் பிரின்சப் (b) சர் சார்லஸ் வில்கின்ஸ்

(c) டாக்டர் ஈ உல்ஷ் (d) கிறிஸ்டியன் லாசன்

14. தொன்மைத் தமிழ் எழுத்து வழங்கிய காலத்தில் இந்தியாவில் எத்தனை வகை எழுத்துக்கள் இருந்தன?

(a) 6 (b) 18

(c) 9 (d) 20

15. மெசபடோமியா எழுத்து

(a) ஆப்பு வடிவ எழுத்து

(b) சித்திர எழுத்து

(c) வட்டெழுத்து

(d) தமிழ் எழுத்து

16. சிந்துசமவெளி எழுத்தும் பிராமி எழுத்தும் குறித்து விரிவாக ஆராய்ந்தவர்

(a) முனைவர் பர்னல்

(b) வி. வெங்கையா

(c) ஐராவதம் மகாதேவன்

(d) எலியட்

17. தமிழ் ஆண்டுகள் எத்தனை?

(a) 50 (b) 60

(c) 10 (d) 32

18. கொல்லம் ஆண்டு எங்குப் பயன்படுத்தப்பெற்றது?

(a) ஆந்திரா (b) தமிழ்நாடு

(c) கர்நாடகா (d) கேரளா

19. கல்வெட்டுகளில் வரும் 'ஆயம்' என்ற சொல் எதைக் குறிக்கும்?

(a) உறவு (b) இறப்பு

(c) வரி (d) புகழ்

20. வட்டெழுத்தைப் பயன்படுத்தியவர்கள்

(a) பாண்டியர் (b) சோழர்

(c) பல்லவர் (d) சேரர்

21. ஹரப்பா, மொகஞ்சதாரோ உள்ள இடம் எது?

(a) பாகிஸ்தான் (b) இலங்கை

(c) குஜராத் (d) உத்திரபிரதேசம்

22. சிந்துவெளி எழுத்துகள் எந்த மொழியோடு ஒப்பிடப்படுகின்றன?

(a) சீனம் (b) ஜப்பான்

(c) எகிப்து (d) சமஸ்கிருதம்

23. தென்பிராமி எழுத்துக்களின் பெயர்

(a) தமிழ் (b) சமஸ்கிருதம்

(c) கரோஷ்டி (d) திராவிடி

24. கரோஷ்டி எழுத்தைப் பயன்படுத்தியவர்கள்

(a) பல்லவர்கள் (b) குப்தர்கள்

(c) மௌரியர்கள் (d) பாண்டியர்கள்

25. பல்லவர் ஆட்சியில் சுட்டப்பட்ட ‘கலப்பை’ என்பது

(a) முகத்தல் அளவை (b) நிறுத்தல் அளவை

(c) எண்ணல் அளவை (d) நீட்டல் அளவை

26. கிரந்த எழுத்து யாருடைய காலத்தில் வளர்ச்சி பெற்றது ?

(a) பாண்டியர் (b) சோழர்

(c) பல்லவர் (d) மௌரியர்

27. அரிக்கமேடு எப்பகுதி சார்ந்தது ?

(a) காஞ்சிபுரம் (b) தஞ்சாவூர்

(c) பாண்டிச்சேரி (d) புதுக்கோட்டை

28. ‘மகாராஜா காட்’ - பெயர் வரக் காரணமான அரசர்

(a) சந்திரகுப்தர் (b) வீரசிவாஜி

(c) திப்புசுல்தான் (d) அசோகர்

29. ‘சுங்கம் தவிர்த்த சோழன்’ - யார் ?

(a) முதலாம் குலோத்துங்கன்

(b) இராசேந்திரன்

(c) இராசராசன்

(d) இரண்டாம் குலோத்துங்கன்

30. ‘குடுமியான் மலைக்கல்வெட்டு’ எது பற்றியது ?

(a) இசை (b) கல்வி

(c) போர் (d) வணிகம்

31. கேரளக் கல்வெட்டுகளில் இடம்பெறும் ‘வியாழ வட்டம்’ என்பது எது பற்றியது ?

(a) காலம் (b) வடிவம்

(c) வரி (d) பரம்பரை

32. தேர்தல் குறித்து விவரிக்கும் கல்வெட்டு

(a) அரச்சலூர்க் கல்வெட்டு

(b) உத்தரமேரூர் கல்வெட்டு

(c) குற்றாலக் கல்வெட்டு

(d) குடுமியான் மலைக்கல்வெட்டு

33. 'தறியிறை' என்பது -

(a) உழவுவரி (b) நிலவரி

(c) தொழில்வரி (d) வருவாய் வரி

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (a) பல்லவர் கல்வெட்டுக்களின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(b) கல்வெட்டு எழுதும் முறையை விவரி.

35. (a) திராவிட மொழிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) பாண்டியரின் மெய்க்கீர்த்திகள் குறித்து எடுத்துரைக்க.

36. (a) மௌரியப் பேரரசின் தோற்றம் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) தேர்தல் முறை குறித்துக் கல்வெட்டுகள் வழி அறியவருவன யாவை?

37. (a) பிராமி எழுத்து ஆராய்ச்சி பற்றி விவரி.

(அல்லது)

(b) தென்னிந்தியாவின் கல்வெட்டாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

38. (a) கல்வெட்டுகளால் அறியலாகும் காலம் குறித்த செய்திகள் யாவை?

(அல்லது)

(b) தமிழ் எழுத்துக்களின் தோற்றம் குறித்து எழுதுக.

39. (a) சிந்து சமவெளி எழுத்துகள் பற்றி விவரி.

(அல்லது)

(b) வட்டெழுத்துக்களின் செல்வாக்கை விளக்குக.

40. (a) பல்லவ கிரந்தத்தின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(b) குறியீடுகளின் இன்றியமையாமையை விவரி.

---

| N–0058 |
|---|

| Sub. Code |
|---|
| 205112 |

**M.A. DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**Tamil**

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(33 \times 1 = 33)$

I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. திருக்குறள் பொருட்பாலில் இடம் பெற்றுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

   (a) 40 (b) 38

   (c) 70 (d) 133

2. ஐந்தவித்தான் ஆற்றலுக்குச் சான்றாய் அமைபவன்

   (a) முருகன் (b) இந்திரன்

   (c) ஆலமர் செல்வன் (d) வருணன்

3. அரசருள் ஏறு எனப்படுபவன் பெற்றிருக்க வேண்டிய அங்கங்களின் எண்ணிக்கை

   (a) 6 (b) 5

   (c) 3 (d) 9

4. வேந்தர்க்கு ஒளியாய் அமையும் பண்புகள்

(a) 3 (b) 6

(c) 7 (d) 4

5. ஒண்தொடி கண்ணே அமைந்துள்ள உயர் சிறப்புகள்

(a) 5 (b) 2

(c) 4 (d) 6

6. தம்மில் இருந்து தமது பார்த்து உண்ணும் சிறப்பிற்கு இணையானது

(a) அரிவை அன்பு (b) அரிவை விருந்தோம்பல்

(c) அரிவை கல்வி (d) அரிவை முயக்கு

7. தலையார் நட்பிற்கு உவமையாய் அமைவது

(a) வாழை (b) தென்னை

(c) பனை (d) கமுகு

8. அன்பில்லாதவிடத்து உண்ணுதலுக்கு ஒப்பாகச் சுட்டப்படும் பொருள்

(a) காஞ்சிரங்காய் (b) அத்திப்பழம்

(c) பாகற்காய் (d) வேப்பங்காய்

9. நால்திசை நாடும் தம் நாடே ஆகும் சால்பினை உடையவர்கள்

(a) வீரர்கள் (b) மன்னர்கள்

(c) அமைச்சர்கள் (d) அறிவுடையோர்

10. திருவினும் திட்பம் பெறுவது

(a) செங்கோல் (b) அறிவு

(c) தென்றல் (d) பதவி

11. உன்னோடு வாழ்தல் அரிது-இதனுள் 'உன்னோடு' என்னும் சொல் குறிப்பது

(a) வயிறு (b) அறியாமை

(c) கல்லாமை (d) வறுமை

12. தக்கோர் குணம் எதனால் அறியப்படும்?

(a) அறிவால் (b) பெருமையால்

(c) கொடையால் (d) கல்வியால்

13. இடும்பை உடையாரின் எச்செயல் இன்னாதது?

(a) அழகு (b) அறிவின்மை

(c) கொடை (d) கோபம்

14. மலரின் அழகு இன்னாததாய் அமைதற்குக் காரணமாவது

(a) அழகின்மை (b) நாற்றமின்மை

(c) காலத்து மலராமை (d) காட்டகத்து மலர்தல்

15. வேளாண்மை இனிதாய் அமைய உழவன் பெற்றிருக்க வேண்டியது

(a) ஏர் (b) கார்

(c) கழனி (d) கடும் உழைப்பு

16. தொல்மான் துழாய் மாலையானைத் தொழல் இனிது - இதில் குறிக்கப்படும் கடவுள்

(a) இந்திரன் (b) சிவன்

(c) பலராமன் (d) திருமால்

17. பிறவாமைக் காக்கும் பிரான்

(a) திருமால் (b) முருகன்

(c) சிவன் (d) வருணன்

18. ஆறங்கம் நால்வேதம் ஆனவன்

(a) சிவபெருமான் (b) செவ்வேள்

(c) திருமால் (d) அருகதேவன்

19. திருமாலை நலனுடை ஒருவன் எனப் பாடியவர்

(a) குலசேகராழ்வார் (b) நம்மாழ்வார்

(c) ஆண்டாள் (d) திருமங்கை ஆழ்வார்

20. பெண்படையார் உன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார் - இதனுள் 'உன்' எனக் குறிக்கப்படுவது

(a) சங்கு (b) சக்கரம்

(c) திருவடி (d) திருத்தோள்

21. தழுக்கிய நாளில் மானுடர் செய்ய வேண்டிய செயல் எனத் திருமூலர் உரைப்பது

(a) கற்றல் (b) தருமம் செய்தல்

(c) போர் செய்தல் (d) விருந்தோம்பல்

22. அறம் செய்யார் செல்வம் எதனைப்போல் பயனற்றது?

(a) எட்டிக்காய் (b) வேப்பங்காய்

(c) பலாக்காய் (d) களாக்காய்

23. தாயுமானவரை உபநிடதக் கருத்துக்களையும் ஞான நூல்களின் உட்பொருளையும் தெளிவாகப் பாடியவர் எனப் போற்றியவர்

(a) தமிழண்ணல் (b) பண்டிதமணி

(c) மு.வ (d) வெள்ளை வாரணர்

24. பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பது

(a) கடல் (b) வானம்

(c) காற்று (d) பரிபூரண ஆனந்தம்

25. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் மீது நான்மணிமாலை பாடியவர்

(a) செய்கு அப்துல் காதிர்

(b) சரவணப்பெருமாள் ஐயங்கார்

(c) சபாபதி

(d) ஐயாசாமி முதலியார்

26. நெல்லும் பதருமாய் நின்றேன் எனப் புலம்பியவர்

(a) குணங்குடியார் (b) தாயுமானவர்

(c) அருணகிரியார் (d) வள்ளலார்

27. ஆசியஜோதி என்பதன் ஆசிரியர்

(a) நாமக்கல் கவிஞர் (b) கவிமணி

(c) பண்டிதமணி (d) ரஸிகமணி

28. ஆயிரம் வாரத்து ஆழியான் நீயே - எனப் புத்தரைப் புகழ்ந்தவர்

(a) மணிமேகலை

(b) அறவண அடிகள்

(c) மணிமேகலா தெய்வம்

(d) அசிதமா முனிவன்

29. நுண்மான் நுழைபுலம் இல்லதான் எழில் நலம் எதனை ஒத்தது ?

(a) மரப்பாவை (b) மண்பாவை

(c) கந்திற்பாவை (d) பாலை நிலம்

30. யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் - யார் கூற்று ?

(a) பாங்கன் (b) தோழி

(c) தலைவன் (d) செவிலி

31. மலர்ந்து பின் கூம்பாதது

(a) கொடிப்பூ (b) செடிப்பூ

(c) கயப்பூ (d) கோட்டுப்பூ

32. பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை தருவது

(a) திருமண் (b) சிலம்பு

(c) திருநீறு (d) திருமாலை

33. காய்சின மாகளிறு அன்னான் எனச் சுட்டப்படுபவன்

(a) திருமால் (b) நான்முகன்

(c) சிவன் (d) பலராமன்

## பகுதி ஆ (7 × 6 = 42)

II. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

34. (a) திருக்குறளின் வான்சிறப்பு அதிகாரக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(b) கல்லாமையின் இழிநிலையினைத் திருக்குறன் கொண்டு நிறுவுக.

35. (a) அகவாழ்வில் குறிப்பறிதலின் இன்றியமையாமையை திருக்குறள் வழிநின்று எடுத்துரைக்க.

(அல்லது)

(b) நட்பாராய்தல் குறித்து நாலடியார் உரைப்பன யாவை?

36. (a) கல்வியின் சிறப்பியல்புகளை பழமொழி நானூறு வழி உரைத்திடுக.

(அல்லது)

(b) வறுமையின் கொடுமையை நல்வழி கொண்டு நிறுவுக.

37. (a) தனி மனிதன் தன் வாழ்வில் இன்னாதன என நீக்க வேண்டியவை யாவை?

(அல்லது)

(b) இனியவை நாற்பது உரைக்கும் அறக்கருத்துக்களை எடுத்துரைக்க.

38. (a) திருஞானசம்பந்தர் பாடியருளிய கோளறு பதிகத்தின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(b) ஆண்டாள் வெண்சங்கிடம் வேண்டி நிற்பன யாவை?

39. (a) அறம் செய்யான் அடையும் இழிநிலையினைத் திருமந்திரத்தின் வழி விவரி.

(அல்லது)

(b) தாயுமானவர் பரிபூரணானந்தம் உணர்த்தும் கருத்துக்களை விளக்கியுரை.

40. (a) பராபரக் கண்ணியில் குணங்குடியார் இறைவனிடம் வேண்டுவன யாவை?

(அல்லது)

(b) புத்தரின் கருணைத்திறத்தினை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

———————

**N–0059**

| Sub. Code |
|---|
| 205113 |

**M.A. DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**Tamil**

**இலக்கணம் 1 – தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. தனிநின்ற எழுத்துகளுக்கு இலக்கணம் கூறும் இயல் எது?

 (a) நூன்மரபு (b) மொழிமரபு

 (c) பிறப்பியல் (d) புணரியல்

2. அரையளபு குறுகும் இயல்புடைய எழுத்து எது?

 (a) இகரம் (b) உகரம்

 (c) ஐகாரம் (d) மகரம்

3. மஃகான் புள்ளிமுன் தோன்றி மயங்கும் எழுத்து எது?

 (a) யகரம் (b) ழகரம்

 (c) வகரம் (d) ரகரம்

4. வினா எழுத்துக்கள் யாவை?

(a) ஆ ஈ ஓ (b) ஆ ஏ ஓ

(c) ஈ ஏ ஓ (d) ஆ ஏ ஐ

5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எது?

(a) நாகு (b) தேக்கு

(c) வரகு (d) மார்பு

6. இகர உகரம் எவற்றுக்கு இசைநிறைவாக வரும்?

(a) ஈகார ஊகாரம் (b) ஈகார ஐகாரம்

(c) ஊகார ஔகாரம் (d) ஐகார ஔகாரம்

7. குற்றொற்றாகா மெய்யெழுத்துகள் யாவை?

(a) ரகார ழகாரம் (b) யகார ழகாரம்

(c) ரகார யகாரம் (d) யகார வகாரம்

8. இருமொழிக்கு ஈறாகும் எழுத்து எது?

(a) வகர மெய் (b) ஞகாரம்

(c) உச்சகாரம் (d) உப்பகாரம்

9. இதழ் குவிந்தியலும் உயிரெழுத்துகள் யாவை?

(a) அ ஆ (b) இ ஈ

(c) உ ஊ (d) எ ஏ

10. பல்லிதழ் இயையப் பிறக்கும் எழுத்து எது?

(a) யகாரம் (b) வகாரம்

(c) லகாரம் (d) றகாரம்

11. மெய்பிறிதாதலுக்குரிய சான்று எது?

(a) யானைக்கோடு (b) மரவேர்

(c) குவளை மலர் (d) பொற்குடம்

12. எந்தச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல்முன் இல்லையாகும்?

(a) அக்கு (b) அத்து

(c) அம் (d) அன்

13. எழுத்துச் சாரியைகளுள் கானொடுந் தோன்றும் நெட்டெழுத்துகள் யாவை?

(a) ஆகாரம் ஈகாரம் (b) ஆகாரம் ஐகாரம்

(c) ஈகாரம் ஔகாரம் (d) ஐகாரம் ஔகாரம்

14. உடம்படு மெய்யாக வரும் எழுத்துக்கள் யாவை?

(a) யகர வகரம் (b) யகர லகரம்

(c) யகர மகரம் (d) யகர றகரம்

15. லனவென வரூஉம் புள்ளி முன்னர் வந்த எழுத்துக்கள் வந்தால் றன ஆகும்?

(a) ணள (b) டண

(c) தந (d) தன

16. குற்றியலுகர அளவுப்பெயர் குறையொடு புணருங்கால் பெறும் சாரியை எது?

(a) ஏ (b) இன்

(c) அத்து (d) அக்கு

17. பல்லவை நுதலிய அகர இறுபெயர் உருபுகளொடு புணருங்கால் பெறும் சாரியை எது ?

(a) அத்து (b) ஒன்

(c) வற்று (d) அன்

18. உருபுப் புணர்ச்சியில் நம் இடை வரும் உயர்திணைப் பெயர் எது ?

(a) எல்லீரும் (b) எல்லாரும்

(c) தாம் (d) எல்லாம்

19. நெட்டெழுத்து இம்பர் ஒற்றுமிகத் தோன்றும் அப்பான் மொழி எது ?

(a) நாகு (b) யாடு

(c) காசு (d) காது

20. திசைப்பெயர் முன்னர் சாரியைக் கிளவி இயற்கையுமாகும் உருபு எது ?

(a) கு (b) இன்

(c) அது (d) கண்

21. சாரியை பெறாது திரிந்து முடிவது எது ?

(a) வடக்கின்கண் (b) கிழக்கின்கண்

(c) தெற்கின்கண் (d) மேல்புடை

22. வல்லெழுத்து மிகாது இயல்பாகும் அகர ஈற்று சொல் எது ?

(a) வினையெஞ்சு கிளவி

(b) அம்ம என்னும் உரைப்பொருட்கிளவி

(c) உவமக்கிளவி

(d) ஆங்க என்னும் உரையசைக்கிளவி

23. அத்தொடு சிவணும் ஆகார ஈற்றுச் சொல் எது ?

(a) இரா (b) பிடா

(c) நிலா (d) தளா

24. ஒடு மரக்கிளவி எந்த மரத்தின் இயல்பாய் முடியும் ?

(a) உதி (b) புளி

(c) யா (d) விள

25. சிறப்புப் பொருளில் வந்த வல்லெழுத்து மிகாத இடைச்சொல் ஈறு எது ?

(a) எகரம் (b) ஒகரம்

(c) ஏகாரம் (d) ஓகாரம்

26. பெற்றம் என்பதைக் குறிக்கும் ஏகார ஈற்றுப் பெயர் எது ?

(a) ஏ (b) வே

(c) சே (d) தே

27. பனையின் முன்னர் எச்சொல் வரும்போது ஐகாரம் கெடும் ?

(a) காய் (b) கோடு

(c) கொடி (d) அட்டு

28. மொழிற்பெயர் அல்லாதது எது ?

(a) உரிஞ் (b) பொருந்

(c) மண் (d) எண்

29. வேற்றுமையில் அகரமும் வல்லெழுத்தும் பெறும் னகர ஈற்றுச் சொல் எது ?

(a) மின் (b) பின்

(c) கன் (d) பன்

30. திரிபுக்கு இடமளிக்காத இயற்பெயர் எது?

(a) கோன் (b) ஆதன்

(c) பூதன் (d) சாத்தன்

31. இன்னொடு சிவணும் மென்றொடர் மொழி எது?

(a) குன்று (b) மன்று

(c) குருந்து (d) வண்டு

32. இரண்டு பெருந்திசைகள் தம்முள் புணரும்போது பெரும் சாரியை எது?

(a) அம் (b) அன்

(c) ஏ (d) அத்து

33. நான்கன் ஒற்று எங்ஙனம் திரியும்?

(a) வகாரம் ஆகும் (b) லகாரம் ஆகும்

(c) யகாரம் ஆகும் (d) மகாரம் ஆகும்

**பகுதி ஆ** $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.

34. (a) எழுத்துகள் பெறும் மாத்திரை குறித்தெழுதுக.

(அல்லது)

(b) நூன்மரபு சுட்டும் எழுத்துகளின் வடிவம் பற்றி விளக்குக.

35. (a) தனிமொழிக் குற்றியலிகரம், புணர்மொழிக் குற்றியலிகரம் குறித்தெழுதுக.

(அல்லது)

(b) மொழி முதல் எழுத்துகளை விளக்குக.

36. (a) எழுத்துகளின் பொதுப்பிறப்பு முயற்சியை விளக்குக.

(அல்லது)

(b) சாரியைகளின் பெயர், முறை, தொகை குறித்தெழுதுக.

37. (a) புணர்ச்சியில் பொருள் வேறுபடுமிடம் பற்றி விளக்குக.

(அல்லது)

(b) உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி குறித்தெழுதுக.

38. (a) மகர ஈறு சாரியையோடு புணருமாற்றை விளக்குக.

(அல்லது)

(b) ஒருபஃது முதலிய குற்றுகர ஈறுகள் உருபுகளோடு புணருமாற்றை எழுதுக.

39. (a) இகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி விதிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) மழையென் கிளவி வளியியல் நிலையும் – விளக்குக.

40. (a) தேனென் கிளவி புணருமாற்றை விளக்குக.

(அல்லது)

(b) தொள்ளாயிரம் – பிரித்தெழுதிப் புணர்ச்சியிலக்கணங் கூறுக.

———————

| N–0060 |
|---|

| Sub. Code |
|---|
| 205114 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**Tamil**

இலக்கியத் திறனாய்வியல்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. திறனாய்வின் இயல்புகளில் ஒன்று

   (a) குறைகாண்பது

   (b) இலக்கியங்களைப் பட்டியலிடுவது

   (c) இலக்கியங்களில் நிறைகுறைகளைக் கண்டறிந்து கூறுவது

   (d) படைப்பாளியை விமர்சிப்பது

2. ஒருதிறனாய்வாளனிடம் இருக்கவேண்டிய அடிப்படை அளவுகோல் அவனது

   (a) பருந்துப் பார்வை (b) தொலைநோக்குப் பார்வை

   (c) மதிப்பீட்டுப் பார்வை (d) அறிவியல் பார்வை

3. தம் படைப்புகளின் வழியேவாழ்வோர்

   (a) கம்பர், வள்ளுவர், இளங்கோ

   (b) நூல் பதிப்பாசிரியர்கள்

   (c) உரையாசிரியர்கள்

   (d) திறனாய்வாளர்கள்

4. தொல்காப்பியர் சொல்லும் எவ்வழக்கு அரிஸ்டாட்டில் கூறும் 'போலச் செய்தல்' கொள்கையை ஒத்திருக்கிறது.

(a) வாய்மொழிவழக்கு (b) புலனெறிவழக்கு

(c) முதுமொழிவழக்கு (d) உலகியல் வழக்கு

5. 'வேம்புதலையாத்தநோன்காழ் எஃகமொடு' என்றவரியால் நெல்நல்வாடையைக் புறப்பாட்டு என்று கூறியவர்

(a) பேராசிரியர் (b) ந.மு. வேங்கடசாமி

(c) இளம்பூரணனார் (d) நச்சினார்க்கினியர்

6. தி.சு. நடராசனின் திறனாய்வு தொடர்பான நூல்

(a) திறனாய்வுக் கலை

(b) கலையும் இலக்கியமும்

(c) இலக்கியத் திறனாய்வு

(d) மொழித்திறன்

7. மனிதனின் சிந்தனையே இதன் தொடக்கம்

(a) உளப்பகுப்பு (b) ஒப்பீடு

(c) மதிப்பீடு (d) வெளிப்பாடு

8. தமிழில் பாராட்டுமுறைத் திறனாய்வுக்குரிய நூலாகமிகுதியும் பேசப்பட்ட நூல்

(a) திருக்குறள் (b) சிலப்பதிகாரம்

(c) பெரியபுராணம் (d) கம்பராமாயணம்

9. கற்பனைமனிதப் பண்பாட்டுவளர்ச்சிக்கு உதவுவது என்று கூறியவர்

(a) ஆபர் கிராம்பி (b) செட்ஸ்விக்

(c) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் (d) ஜி.யு. போப்

10. கற்பனைகுறித்த அடிசனின் கருத்து

(a) மனிதனை அறிய உதவுவது

(b) இலக்கியத்திறனை மதிப்பிடுவது

(c) மனிதனுக்கு இன்ப உணர்வினை ஊட்டுவது

(d) மனங்களை உற்சாகப்படுத்துவது

11. மனிதனின் இத்தகுபண்புதான் கற்பனைக்கு அடிப்படை

(a) இயல்பாகப்புதைந்துகிடக்கும் கனவுகாணும் பண்பு

(b) விழிப்புணர்வுச் சிந்தனைப் பண்பு

(c) கேட்டலறிவுவெளிப்பாட்டுப் பண்பு

(d) கற்றலறிவு, வெளிப்பாட்டுப் பண்பு

12. போர்க்களக் காட்சிப் பாடல்களில் கற்பனைக்கு முதலிடம் தந்தவர்

(a) ஔவையார்

(b) பரஞ்சோதி முனிவர்

(c) முரஞ்சியூர் முடிநாகராயர்

(d) செயங்கொண்டார்

13. இலக்கியத்தின் தலையாய கடமை

(a) சிறந்தகருத்துக்களைத் தருவது

(b) சொல்வளமையைக் காட்டுவது

(c) படைப்பாளியை இனங்காட்டுவது

(d) சிறந்த உணர்ச்சிககளை ஊட்டுவது

14. நம்பிநெடுஞ்செழியனின் மறைவுக்குப்பின் கையறுநிலைப் பாடல் பாடியது

(a) குடவாயிற் கீர்த்தனார்

(b) ஆவூர் மூலங்கிழார்

(c) பேரெயின் முறுவலார்

(d) பெருங்கடுங்கோ

15. துன்பம் வந்தநிலையில் யாதுசெய்யச் சொல்கிறார் வள்ளுவர்?

 (a) துன்பத்தைத் தூரப்போக்கு
 (b) இடுக்கண் வருங்கால் நகுக
 (c) எதிர்கொண்டுநில்
 (d) இறையருள் நாடு

16. மூப்பு, பிணி, வருத்தம், மெலிவுகாரணமாகத் தோன்றும் மெய்ப்பாடு

 (a) இளிவரல் (b) நகை
 (c) அழுகை (d) பெருமிதம்

17. நாவல் கட்டமைப்பின் இரண்டு கூறுகள்

 (a) பின்னலும், உத்தியும்
 (b) உட்கதையமைப்பு, நிதழ்ச்சிக் கட்டமைப்பு
 (c) முதன்மை கதைமாந்தர், துணைமை கதைமாந்தர்
 (d) தொடக்கமும், முடிவும்

18. கிராமம், இயற்கையின் வதனத்திலிருக்கும் சிந்தூரத் திலகம் என்று கூறியவர்

 (a) பாலகுமாரன் (b) ஜெயகாந்தன்
 (c) வைரமுத்து (d) சிவசங்கரி

19. கருத்து, சொல், உணர்ச்சி என்ற மூன்றும் இணைகின்றபோது இலக்கியங்களுக்குக் கிடைப்பதுயாது?

 (a) சிறந்த வடிவம் (b) சிறந்த உத்தி
 (c) சிறந்த கதை (d) சிறப்பு

20. இயற்கை என்ற தலைப்பில் கவிதை எழுதியவர்

 (a) பாரதியார்
 (b) இரசிகமணி
 (c) திரு.வி.கலியாண சுந்தரனார்
 (d) பாரதிதாசன்

21. அச்சத்தின் அடிப்படையில் மனிதர்களை ஒழுக்கத்துடன் வாழத்தூண்டுவது

(a) சமூக அக்கறை (b) அறநெறிக் கொள்கைகள்

(c) பக்திமை உணர்வு (d) இலக்கியங்கள்

22. புலவர்கள் மன்னர்களின் பெயர்களைக் கண்டிக்கும் அளவு செல்வாக்கு பெற்றவர்கள் என்பதற்குச் சான்று

(a) ஔவையார் (b) கோவூர் கிழார்

(c) அரிசில்கிழார் (d) முரஞ்சியூர் முடிநாகராயர்

23. முதியோர் உளவியல் பற்றிய அசோகமித்திரனின் குறுநாவல் எது ?

(a) தலைமுறைகள் (b) குற்றப்பத்திரிக்கை

(c) மாறுவேடம் (d) பிரபஞ்சம்

24. பரவலாகப் பலரதுகவனத்தை ஈர்த்த திறனாய்வு அணுகுமுறை

(a) நடப்பியல் (b) உளவியல்

(c) தொல்படிமவியல் (d) மானுடவியல்

25. பட்டுக்கோட்டையார் சின்னப் பையனுக்கு சொன்ன சேதி

(a) நாளும் ஒருபாடம் படிக்கணும்

(b) ஆளும் வளரணும் அறிவும் வளரணும்

(c) ஓடிவிளையாடணும்

(d) ஆளுமைகொண்டு அடக்கி ஆளணும்

26. தொன்மையான இலக்கிய நெறியை எவ்வாறு குறிப்பிடுகிறோம் ?

(a) செல்வியல் (b) மரபியல்

(c) தொன்மவியல் (d) தத்துவவியல்

27. தமிழிலக்கியத் திறனாய்வு யார் காலத்திலிருந்து தொடங்கியதாக சி.சு. செல்லப்பா கூறியுள்ளார்?

(a) இலக்கண ஆசிரியர்கள்

(b) இலக்கிய ஆசிரியர்கள்

(c) திறனாய்வாளர்கள்

(d) உரையாசிரியர்கள்

28. இமேஜ் என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ் வடிவம்

(a) குறியீடு (b) படிமம்

(c) விழுமியம் (d) உள்ளீடு

29. மனித உறவுகள் யாவற்றிலும் மிகவும் அடிப்படையான அமைப்பு எது?

(a) ஊர் (b) தெரு

(c) குடும்பம் (d) நாடு

30. மெய்ப்பாடு என்பது சிறப்பாக எதற்குரியது?

(a) கற்பனைக்கு (b) கவிதைக்கு

(c) நாவலுக்கு (d) சிறுகதைக்கு

31. படிமவியலின் வேறு பெயர்

(a) உருத்தோற்றவியல் (b) புனையியல்

(c) இருத்தலியல் (d) நடப்பியல்

32. இலக்கியம் என்பதே ஒரு கலைஞன் மனித வாழ்க்கையைப் பார்த்து அதனைப் போல உருவாக்குவதாகும் என்றவர் யார்?

(a) ஹோமர் (b) அரித்மெட்டிக்

(c) அரிஸ்டாட்டில் (d) ஆன்டரசன்

33. ஒப்பீட்டுத் திறனாய்வின் வித்துக்களைத் தூவியவர் யார்?

(a) கால்டுவெல் (b) ஜி.யு.போப்

(c) சிக்மன் பிராய்டு (d) டாக்டர் தமிழண்ணல்

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

எல்லாவினாக்களிலும் (அ) அல்லது (ஆ) விற்குப் பதில் தருக.

34. (a) திறனாய்வின் இயல்புகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(b) இலக்கியக் கொள்கைகளை வரையறுக்க.

35. (a) மதிப்பீட்டுமுறைத் திறனாய்வைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(b) ஒப்பீட்டுத் திறனாய்வின் வளர்ச்சி பற்றி விவரிக்க.

36. (a) கவிதையும், சொல்வளமும் பற்றி சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(b) பாரதியின் கற்பனைகுறித்து எழுதுக.

37. (a) உணர்ச்சியின் தகுதிகளை விளக்கி வரைக.

(அல்லது)

(b) இளிவரல் எனும் மெய்பாட்டைச் சான்றுடன் விளக்குக.

38. (a) நாவலாசிரியரின் மனநிலையோடு கட்டமைப்பின் தொடர்பை விளக்குக.

(அல்லது)

(b) 'கவிதைக்கு முதன்மை எதுகை' - இக்கூற்றை விளக்குக.

39. (a) திறனாய்வில் அறிவியல் பார்வைபெறுமிடம் யாது? விளக்குக.

(அல்லது)

(b) 'தலைமுறைகள்' - குறுநாவல் உணர்த்தும் கருத்தை விவரிக்க.

40. (a) புனைவியல் குறித்த இயல்புகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(b) குறியீடு தமிழிலக்கியத்தோடு கொண்டுள்ள தொடர்பை ஒருசான்றால் விளக்குக.

———————

| N–0061 |
|---|

| Sub. Code |
|---|
| 205121 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Semester**

**Tamil**

இலக்கணம்-2 தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. ஒன்றன்பால் ஈறு எது?

(a) அ (b) ஆ

(c) வ (d) து

2. முன்றில் என்பது எவ்வகையில் அடங்கும்?

(a) இலக்கணமுடையது

(b) இலக்கணப்போலி

(c) மரூஉ

(d) குழூஉக்குறி

3. திணை விரவி வரும் பெயர் எது?

(a) இயற்பெயர்

(b) சுட்டுப்பெயர்

(c) வியங்கோள் எண்ணுப்பெயர்

(d) எண்ணுப்பெயர்

4. உயர்திணைக்கண் பால்பிரிந்திசையாது அஃறிணைப் பாலாய் நின்றிசைக்கும் கிளவி எது?

(a) குடிமை (b) காலம்

(c) ஆண்மை (d) இளமை

5. பெயர் தோன்றுகின்ற நிலையைக் குறிக்கும் வேற்றுமை எது?

(a) எழுவாய் வேற்றுமை

(b) இரண்டாம் வேற்றுமை

(c) ஐந்தாம் வேற்றுமை

(d) ஆறாம் வேற்றுமை

6. ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள் எது?

(a) இயற்கை (b) கிழமை

(c) முறைமை (d) வண்ணம்

7. முதற்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு அது முதற்கண் வருமாயின் சினைக்கு எந்த வேற்றுமை உருபு வரும்?

(a) ஐ (b) ஒடு

(c) கு (d) இன்

8. மெய்யறி பனுவலால் உணரப்படுவது எது?

(a) ஓம்படைக்கிளவி

(b) தடுமாறு தொழிற்பெயர்

(c) கொடையெதிர் கிளவி

(d) அச்சக்கிளவி

9. உயர்திணைப்பெயர்களில் விளியேற்கும் உயிரீறுகள் யாவை?

(a) இஎஐஒ (b) அஉஐஓ

(c) இஉஎஒ (d) இஉஐஓ

10. விளியேற்கும் நிலையில் ஏயொடு சிவணும் உயிரீறுகள் யாவை?

(a) இஈ (b) ஐஓ

(c) இஐ (d) ஈஓ

11. மலையமான் என்பது என்ன பெயர்?

(a) குடிப்பெயர்

(b) வினைப்பெயர்

(c) உடைமைப்பெயர்

(d) எண்ணியற் பெயர்

12. கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் எது?

(a) அவையத்தார்

(b) சோழியன்

(c) முப்பத்து மூவர்

(d) பட்டிபுத்திரர்

13. பொருளுணர்த்தி நிற்கும் அஃறிணைப்பெயர் எது?

(a) பல்ல

(b) உள்ள

(c) வினைப்பெயர்க்கிளவி

(d) இல்ல

14. இருதிணைக்கண்ணும் பன்மைப் பாலுக்கு உரிய பெயர்நிலைக்கிளவி எது?

(a) தான் (b) எல்லாம்

(c) நீயிர் (d) நீ

15. வினைச்சொல்லின் பொது இலக்கணம் யாது ?

(a) வேற்றுமை கொள்ளும், காலமொடு தோன்றும்

(b) வேற்றுமை கொள்ளாது, காலமொடு தோன்றாது

(c) வேற்றுமை கொள்ளும், காலமொடு தோன்றாது

(d) வேற்றுமை கொள்ளாது, காலமொடு தோன்றும்

16. தன்மைப் பன்மை வினைமுற்று எது ?

(a) அஞ்சினம்

(b) உண்டனென்

(c) உண்பல்

(d) உண்குவென்

17. படர்க்கை ஒருமை வினைமுற்று ஈறு எது ?

(a) அர்

(b) ஆர்

(c) ஆள்

(d) ப

18. 'உணற்கு வந்தான்' என்பதில் அமைந்துள்ள வினையெச்ச வாய்பாடு எது ?

(a) செய்யிய

(b) செயின்

(c) செய

(d) செயற்கு

19. மயங்குமொழிக் கிளவியில் விளங்கத் தோன்றும் காலங்கள் எவை ?

(a) இறப்பு, நிகழ்வு (b) இறப்பு, எதிர்வு

(c) நிகழ்வு, இறப்பு (d) நிகழ்வு, எதிர்வு

20. தில்லைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

(a) விழைவு, காலம், ஒழியிசைக்கிளவி

(b) கழிவு, ஆக்கம், ஒழியிசைக்கிளவி

(c) விழைவு, ஆக்கம், ஒழியிசைக்கிளவி

(d) கழிவு, காலம், ஒழியிசைக்கிளவி

21. உம்மைச்சொல் உணர்த்தும் பொருள் எது?

(a) அச்சம் (b) தேற்றம்

(c) எச்சம் (d) இசை

22. பிரிவில் அசைநிலை எது?

(a) அந்தில் (b) ஆகல்

(c) ஆங்க (d) ஆர்

23. தொகைச்சொல்லிடத்து எச்சக்கிளவி பெற்று வரும் உம்மை எது?

(a) எச்சவும்மை

(b) எதிர்மறை உம்மை

(c) எண்ணும்மை

(d) முற்றும்மை

24. பிரிந்து சென்று ஒன்றும் இயல்பல்லாத எண்ணிடைச்சொல் எது?

(a) எனா (ஞ) என்று

(c) என (d) ஒடு

25. உயர்பு என்னும் பொருள் உணர்த்தும் உரிச்சொல் எது?

(a) உறு (b) தவ

(c) புரை (d) உரு

26. பயப்பு என்பதன் பொருள் யாது?

(a) வளன் (b) பயன்

(c) புணர்ச்சி (d) நிறன்

27. உள்ளதன் நுணுக்கம் என்னும் பொருள் உணர்த்தாத உரிச்சொல் எது?

(a) ஒய்தல் (b) ஆய்தல்

(c) நிழத்தல் (d) முரஞ்சல்

28. குங்குமம் என்பது என்ன சொல்?

(a) இயற்சொல் (b) திரிசொல்

(c) திசைச்சொல் (d) வடசொல்

29. தண்ணந்துறைவன் என்பதில் உள்ள செய்யுள் விகாரம் எது?

(a) வலிக்கும் வழி வலித்தல்

(b) மெலிக்கும் வழி மெலித்தல்

(c) விரிக்கும் வழி விரித்தல்

(d) தொகுக்கும் வழித் தொகுத்தல்

30. பாம்பு பாம்பு என்பது என்ன பொருள் குறித்து வந்தது?

(a) விரைவு

(b) துணிவு

(c) உடன்பாடு

(d) ஒரு தொழில் பலகால் நிகழ்தல்

31. கடி சூத்திரப்பொன் என்பது எந்த வேற்றுமைத்தொகை?

(a) இரண்டாம் வேற்றுமைத்தொகை

(b) மூன்றாம் வேற்றுமைத்தொகை

(c) நான்காம் வேற்றுமைத்தொகை

(d) ஐந்தாம் வேற்றுமைத்தொகை

32. இருமொழி மேறும் பொருள் நின்ற தொகைச்சொல் எது?

(a) வேங்கைப்பூ

(b) அலைகடல்

(c) வெள்ளாடை

(d) உவாப்பதினான்கு

33. கூரியதோர் வாள்மன் என்பது எந்த எச்சம்?

(a) பிரிநிலை எச்சம்

(b) எதிர்மறை எச்சம்

(c) ஒழியிசை எச்சம்

(d) குறிப்பெச்சம்

**பகுதி ஆ** (7 × 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.

34. (a) செப்பும் வினாவும் குறித்தெழுதுக.

(அல்லது)

(b) இயற்பெயர்க்கிளவியும் சுட்டுப்பெயர்க்கிளவியும் பற்றி விளக்குக.

35. (a) நான்காம் வேற்றுமை குறித்தெழுதுக.

(அல்லது)

(b) ஆகுபெயர்க் கிளவி-விளக்குக.

36. (a) மெய்யீறுகள் விளியேற்றலை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) அப் பதினைந்தும் அவற்றோ ரன்ன-விளக்குக.

37. (a) பாலறி வந்த அஃறிணைப் பெயர்களை விவரி.

(அல்லது)

(b) தன்னை ஒருமை வினைமுற்ற குறித்தெழுதுக.

38. (a) பெயரெச்சம் பற்றி விளக்குக.

(அல்லது)

(b) இடைச்சொல்லின் பொதுவிலக்கணம் எழுதுக. .

39. (a) எண்ணிடைச்சொற்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(b) உரிச்சொற்கள் பொருள் உணர்த்துமற்றை விளக்குக.

40. (a) நிரல்நிறைப்பொருள்கோள், சுண்ணப்பொருள்கோள் குறித்தெழுதுக.

(அல்லது)

(b) அவையல்கிளவி, இரத்தல் கிளவி பற்றி விளக்குக.

———————

| N–0062 |
|---|

| Sub. Code |
|---|
| 205122 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Semester**

**Tamil**

தமிழர் பண்பாடும் கலையும்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் **விடை தருக.**

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆயிரம் கண்கள் உடையவன்

(a) சிவன் (b) திருமால்

(c) இந்திரன் (d) முருகன்

2. சிவபெருமானை "நீலமணி மிடற்று ஒருவன்" எனக் குறிப்பிட்டவர்

(a) கபிலர் (b) ஔவையார்

(c) பரணர் (d) வள்ளுவர்

3. தொல்காப்பிய நன்னூல் என்னும் நூலை இயற்றியவர்

(a) வேதநாயக சாஸ்திரி

(b) சாமுவேல் பிள்ளை

(c) சாமிநாத பிள்ளை

(d) வேதநாயகம் பிள்ளை

4. பழித்தல் முறையில் பாடுவது ———————— எனப்படும்

(a) ஊசல் (b) பேசல்

(c) வைதல் (d) ஏசல்

5. குமரிக்கண்டம் மாந்தரினம் தோன்றிய முதலிடம் என்று உரைப்பவர்

(a) ஈராசு பாதிரியார் (b) ஸ்காட்

(c) வெப்பர் (d) மாக்சு முல்லர்

6. புத்த சமயக் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட தமிழ்நூல்

(a) சிலப்பதிகாரம் (b) மணிமேகலை

(c) சீவகசிந்தாமணி (d) திருக்குறள்

7. சமற்கிருதம் என்ற சொல்லின் பொருள்

(a) கட்டப்பட்டது

(b) திருத்தப்பட்டது

(c) நன்கு அமைத்துகொள்ளப்பட்டது

(d) சமைக்கப்பட்து

8. படாம் என்னும் சொல்சின் பொருள்

(a) துணி (b) ஓவியம்

(c) வடிவம் (d) படம்

9. மன்னர்களின் வாயிலில் நின்று துயிலெடை பாடியவர்கள்

(a) கலைஞர்கள் (b) பாணர்கள்

(c) அமைச்சர்கள் (d) புலவர்கள்

10. பாணப்பேறு எனப்படுவது

(a) பாணர்களுக்கு உணவளித்தல்

(b) பாணர்களுக்குப் பரிசு தருதல்

(c) பாணர்களுக்கு நிலமளித்தல்

(d) பாணர்களுக்குத் துகில் அளித்தல்

11. தீக்கடைக்கோல் கொண்டு மூங்கிலில் துளையுண்டாக்கிக் குழலை அமைப்பது பற்றிக் குறிப்பிடுதல் நூல்

(a) பெரும்பாணாற்றுப்படை

(b) சிறுபாணாற்றுப்படை

(c) திருமுருகாற்றுப்படை

(d) கூத்தராற்றுப்படை

12. சங்கீரணசாதி என அழைக்கப்பட்டவன்

(a) இராசசிம்மன்

(b) நரசிம்மன்

(c) நத்திவர்மன்

(d) மகேந்திரவர்மன்

13. காவடிச் சிந்து பாடியவர்

(a) அண்ணாமலை ரெட்டியார்

(b) அனந்த பாரதியார்

(c) மாரிமுத்துப்பிள்ளை

(d) முத்துத்தாண்டவர்

14. மன்னர்க்கு மட்டுமே உரிய கூத்துகள்

(a) பொதுவியல்

(b) வேத்தியல்

(c) குரவைக் கூத்து

(d) வள்ளிக் கூத்து

15. சிவபெருமான், திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கிய பின்னர், தேர்ப்பாகனாக இருந்க நான்முகன் காணும்படி ஆடியது.

(a) கொடுகொட்டி (b) பாண்டரங்கம்

(c) கடையம் (d) துடியாடல்

16. எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்தும் மண்டிலமாக நின்றும் ஆடுவது

   (a) குரவைக் கூத்து

   (b) துணங்கைக் கூத்து

   (c) வள்ளிக் கூத்து

   (d) பாவைக் கூத்து

17. கதை தழுவிய கூத்து ——————— எனப்படும்

   (a) நடனம்

   (b) நாட்டியம்

   (c) நாடகம்

   (d) பொம்மலாட்டம்

18. வீரம் பற்றிய நாடகம் ——————— எனப் பெயர் பெற்றது

   (a) சாத்துவதி

   (b) ஆரபடி

   (c) கைசிகி

   (d) பாரதி

19. இராசராசன் என்னும் நாடகத்தை எழுதியவர்

   (a) ஔவை. சண்முகம்

   (b) அரு. இராமநாதன்

   (c) பம்மல் சம்பந்தம்

   (d) சங்கரதாஸ் சுவாமிகள்

20. அருந்திறல் பிரிந்த அயோத்தி போல என்னும் உவமையால் சுட்டப்படுபவன்

   (a) இராமன் (b) பரதன்

   (c) அனுமன் (d) கோவலன்

21. கிறித்துவ நாடகங்களில் சிறப்பிடம் பெற்று நிற்பது

(a) ஆதாம் ஏவாளின் விலாசம்

(b) ஞான சவுந்தரி

(c) அர்ச்பிலோ மேனம்மாள்

(d) பேரின்ப கலா சிங்காரி

22. முக்கட் செல்வன் நகர் எனச் சுட்டப்பெறுவது

(a) முருகன் கோயில்

(b) திருமால் கோயில்

(c) சிவன் கோயில்

(d) வருணன் கோயில்

23. தஞ்சைப் பெருவுடையார் கோயில் யாருடைய கட்டக்கலைத் திறனுக்குச் சான்று பகர்கிறது?

(a) சேரர் (b) சோழர்

(c) பாண்டியர் (d) பல்லவர்

24. வட்டிகைச்செய்தி எனக் குறிப்பிடப்படுவது

(a) சிற்பம் (b) ஓவியம்

(c) கட்டடம் (d) செந்நூல்

25. தஷிண சித்திரம் என்னும் நூலுக்கு உரை எழுதியவன்

(a) இராசராசன் (b) இராசேந்திரன்

(c) இராசசிம்மன் (d) முதலாம் மகேந்திரவர்மன்

26. தாமரைக்குள ஓவியம் காணப்பெறும் இடம்

(a) சித்தன்னவாசல் (b) திருமலைப்புரம்

(c) காஞ்சிபுரம் (d) பனைமலை

27. தருமபுரி மாவட்டம் அதமன் கோட்டையில் உள்ள ஒரு கோயிலில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் எக்காட்சியை மையமாகக் கொண்டவை?

(a) மகாபாரதக் காட்சிகள்

(b) இராமாயணக் காட்சிகள்

(c) கண்ணனின் திருவிளையாடல்கள்

(d) சிவனின் திருவிளையாடல்கள்

28. தஞ்சை மாவட்டம் திருவீழிமிலையிலுள்ள சிவன்கோயில் மண்டபத்து விதானத்தில் காணப்படும் ஓவியங்கள் எந்நூற்றாண்டைச் சேர்ந்தவை?

(a) கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டு

(b) கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டு

(c) கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டு

(d) கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டு

29. மண் உருவங்களைச் செய்த கலைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

(a) மண்ணீட்டாளர்

(b) மண்சிற்பக்கலைஞர்

(c) ஓவமாக்கள்

(d) கண்ணுள் வினைஞர்

30. தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமை யாருக்கு உரியது?

(a) சேரர் (b) சோழர்

(c) பாண்டியர் (d) பல்லவர்

31. "இறைவன் ஆடிய எழுகைத் தாண்டவம்" என்னும் நூலின் ஆசிரியர்.

(a) மயிலை சீனி. வேங்கடசாமி

(b) கணபதி

(c) நாகசாமி

(d) நீலகண்ட சாத்திரியார்

32. மன்னர் முதலியோர்க்கு எடுத்த உருவச் சிலைகள்

(a) தெய்வ உருவங்கள்

(b) இயற்கை உருவங்கள்

(c) கற்பனை உருவங்கள்

(d) படிமை உருவங்கள்

33. தச்சு சாத்திரம் எனப்பெறுவது எவ்வகை நூல்?

(a) சிற்ப நூல்

(b) ஓவிய நூல்

(c) கட்டட நூல்

(d) வான நூல்

## பகுதி ஆ (7 × 6 = 42)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

34. (a) வெறியாட்டு குறித்து விளக்குக.

(அல்லது)

(b) அச்சுப்பணியில் கிறித்துவரின் பங்கு குறித்து விளக்குக.

35. (a) ஆங்கில ஆட்சியின் செல்வாக்கு குறித்து விளக்குக.

(அல்லது)

(b) சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இசை பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

36. (a) நரம்புக் கருவிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) பல்லவர் கால இசை பற்றி விளக்குக.

37. (a) சிலப்பதிகாரம் சுட்டும் பதினோரு வகை ஆடல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) ஆடுகளம் - என்பது குறித்து விளக்குக.

38. (a) நாடக சபைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) நாயன்மார்கள், ஆழ்வார்கள் குறிப்பிடும் கோயில் வகைகளை விளக்கியுரைக்க.

39. (a) சங்க காலத்தில் ஓவியக்கலை சிறப்புற்றிருந்தமையைச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

(b) சோழர்கால ஓவியங்கலையின் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

40. (a) பல்லவர் கால பாறைச் சிற்பங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(b) யவனச் சிற்பத்திற்கும் இந்தியச் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் புலபடுத்துக.

———————

| N–0063 |
|---|

| Sub. Code |
|---|
| 205123 |

**M.A. DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Semester**

**Tamil**

திறனாய்வுக் கோட்பாடுகள்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(33 \times 1 = 33)$

I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'இலக்ககியமானது வாழ்க்கையின் நோக்கத்திற்காகவே வாழ்க்கையை உருவாக்குகிறது'. என்றவர்

(a) வில்லியம் (b) ஆஸ்கார் ஒயில்டு

(c) ஷெல்லி (d) ஹீட்ஸ்

2. 'மிக நல்ல எண்ணங்களின் பதிவேடாக இலக்கியம் உள்ளது' என மொழிந்தவர்

(a) வேர்ட்ஸ்வோர்த் (b) சார்லஸ்

(c) ஹென்றி (d) எமர்சன்

3. லெனினால் மாபெரும் இலக்கியமேதை எனக் கொண்டாடப்பட்டவர்

(a) அரிஸ்டாட்டில் (b) ரூசோ

(c) டால்ஸ்டாய் (d) மார்க்ஸ்

4. ‘பாவலர் சரித்திர தீபிகம்’ என்ற நூலை எழுதியர்

(a) சதாசிவம் பிள்ளை (b) இராசமாணிக்கனார்

(c) கே.கே. பிள்ளை (d) சிற்பி

5. ‘கவிதையின் மதிப்பு முழுமையையும் அதன் உள்ளகத்தில் இருந்து மதிப்பிடுதல் வேண்டும்’ என்றவர்

(a) பிளாட்டோ (b) டிக்கன்ஸ்

(c) பிராட்லி (d) ரூசோ

6. ‘கவிதையை அழகின் உறைவிடமாகக் கருதுகின்றேன்’ என மொழிந்தவர்

(a) எமர்சன் (b) எட்கர் ஆலன்போ

(c) கீட்ஸ் (d) மில்டன்

7. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலின் ஆசிரியர்

(a) ஆ.வேலுப்பிள்ளை (b) அகிலன்

(c) மு.வரதராசனார் (d) தமிழண்ணல்

8. ஆங்கில இலக்கிய வரலாற்றை முதன் முதலில் எழுதியவர்

(a) தாமஸ் வார்டன் (b) ரோசர்

(c) எட்கர் (d) கென்னடி

9. நடை பற்றிய கருத்தரங்கம் முதன்முதலாக நடைபெற்ற நாடு

(a) இந்தியா (b) அமெரிக்கா

(c) பிரான்ஸ் (d) பிரிட்டன்

10. Kamba Ramaya – A study – என்ற நூலின் ஆசிரியர்

(a) டி.கே. சி (b) மு.மு. இஸ்மாயில்

(c) வ.வே,சு.ஐயர் (d) எஸ். ராமகிருஷ்ணன்

11. ‘காலங்களின் மாறுதலுக்கு ஏற்ப சமுக மதிப்புகள் மாறுகின்றன’ எனக் கூறியவர்

(a) எமர்சன் (b) மில்டன்

(c) டி.எஸ். எலியட் (d) கீட்ஸ்

12. பங்குநிலை மோதல் என்பது யாருடன் தொடர்புடையது ?

(a) ஆண் (b) திருநங்கை

(c) பெண் (d) உறவுகள்

13. மனித சிந்தனையில், பகுத்தறிவின் உயர்ந்த வடிவமாக அமைந்தது

(a) கருத்து முதல் வாதம்

(b) பொருள் முதல் வாதம்

(c) சமய முதல் வாதம்

(d) இயங்கியல் பொருள் முதல் வாதம்

14. உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது

(a) உற்பத்தி முறைமை (b) பங்கீட்டு முறைமை

(c) வணிக முறைமை (d) காரணி முறைமை

15. இரண்டாவது பாலினம் (The Second Sex 1949) என்ற நூலின் ஆசிரியர்

(a) சய்மோன் தெ பௌவோ

(b) ரெனால்ட்

(c) ஹியுங்கோ

(d) சால்ட்விச்

16. தந்தைவழிச் சமூகக் குடும்ப அமைப்பை உடைக்க எழுந்த பெண்ணியம்

(a) மிதவாதப் பெண்ணியம்

(b) தீவிரவாதப் பெண்ணியம்

(c) தாராளவாதப் பெண்ணியம்

(d) மார்க்சியப் பெண்ணியம்

17. குழந்தையின் மனநிலையை இயல் பூக்கநெறி அல்லது இன்பநெறி (pleasure principle) என்று குறிப்பிடுபவர்

(a) சிக்மண்ட் பிராய்ட்

(b) ஆபிரகாம் மாசுலோ

(c) வில்ஹெல்ம் வுண்டட்

(d) வில்லியம் ஜேம்ஸ்

18. உளப்பகுப்பாய்வியலின் அடிப்படையிலான இலக்கியத் திறனாய்வு எத்தனை வகைப்படும்?

(a) 5 (b) 4

(c) 6 (d) 7

19. 'மொழிக்கிடங்கைப் பேச்சு இல்லாத மொழி' என்றவர்

(a) விளாதிமிர் (b) பெடரர்

(c) சாரமன் (d) ரோலாண்பார்த்

20. தொன்மை, விருந்து என்ற இரண்டும் குறியியலுக்குத் தேவையான கூறுகளாகக் குறிப்பிடுபவர்

(a) அகத்தியலிங்கம் (b) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

(c) பிரேமானந்தன் (d) மு.வ

21. 'சசூரின் கிராமடாலஜி' என்ற நூலை மொழிபெயர்த்தவர்

(a) ஜியர்ஜீயா (b) அட்ரின்

(c) காயத்ரி ஸ்பீவக் (d) விநாயக் ஹண்டே

22. 'மீண்டும் பிராய்டின் பாதையில்' (Back to Freud) என்னும் ஆய்வியக்கத்தைத் தோற்றுவித்துச் செயற்படுத்தியவர்

(a) ஜீல்ஸ் (b) டோமினிக்

(c) ஆன்னி (d) டாக்டர் லாக். லக்கான்

23. ‘மரப்பசு’ நாவலின் ஆசிரியர்

(a) தி.ஜானகிராமன் (b) ஜெயகாந்தன்

(c) அகிலன் (d) கல்கி

24. ‘கங்கா’ என்ற பாத்திரம் இடம்பெறும் புதினம்

(a) மோகமுள்

(b) பாரீசுக்குப் போ

(c) மணிபல்லவம்

(d) சில நேரங்களில் சில மனிதர்கள்

25. ‘கீழைத்தேசியம்’ என்ற கருத்தைக் கொண்டவர்

(a) ரூசோ (b) எட்வர்ட் சைத்

(c) காயத்ரி ஸ்பைவக் (d) க.கைலாசபதி

26. மூன்றாம் உலகப் பெண்ணடிமைத்தனம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(a) காலனி ஆதிக்கம்

(b) இரட்டைக் காலனி ஆதிக்கம்

(c) பெண்மையப் பிறழ்வு

(d) ஆண் அதிகாரத்துவம்

27. புலம்பெயர்ந்தோர் மத்தியிலிருந்து வெளிவந்த முதலாவது கவிதைத் தொகுப்பு எது ?

(a) துருவச் சுவடுகள் (b) அயல் மகரந்தங்கள்

(c) அயலகத்திலிருந்து (d) வேர்களைத்தேடி

28. உயிரினங்களின் சமுதாயம் என்னும் பொதுவான கொள்கைக்கு ‘உயிரின ஒருமைப்பாடு’ என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்

(a) கார்ல் மோபியாஸ் (b) பிரான்

(c) பெர்ட்டன்ஸ் (d) மோகைல் பார்க்

29. 'அறிவது என்பதைச் சொல்லுவது என்பதாக மொழி மாற்றம் செய்வதுதான் கதையாடல்'.... என்றவர்

(a) சசூர் (b) ஹென்றி

(c) பாஸ்கல் (d) ஹேடன் ஒயிட்

30. அமைப்பியலின் வளர்ச்சியாக - ஆனால் அதிலிருந்து மாறுபட்டும் முரண்பட்டும் - பின்னை அமைப்பியல் (Post – Structuralism) தோன்றிய நாடு?

(a) அமெரிக்கா (b) பிரிட்டன்

(c) பிரான்சு (d) ஜெர்மன்

31. தனிநிலையாகச் சொற்கள் தனித்து நின்று பொருள் தருவதனைக் குறிக்கும் சொல்

(a) ஒட்டிணைவுச் சொற்கள்

(b) தகுதிநிலைச் சொற்கள்

(c) இணைப்புச் சொல்நிலை

(d) வேர்ச்சொற்கள்

32. 'அமைப்பியலில் அழகே' செய்தி என்றவர்

(a) லோத்மன் (b) ஜோன்ஸ்

(c) முக்கரோவ்ஸ்கி (d) ஆபிரகாம் மாசுலோ

33. இலக்கியம் என்பது மொழியின் வளர்பண்பு கொண்ட ஓர் ஒழுங்கமைப்பே (system) என்றவர்

(a) ரேனியல் (b) ஆடம் ஜான்

(c) சார்லஸ் (d) யூரிதின்யானொவ்

### பகுதி ஆ (7 × 6 = 42)

II. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

34. (a) மீமெய்ம்மையியல் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) இலக்கியத்தின் வரலாறு காணுதல் என்பதனை விவரி.

35. (a) கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டினை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

(b) இலக்கிய வரலாறெழுதியல் என்பதன் தன்மைகளை எடுத்துரைக்க.

36. (a) ஒப்பியல் ஆய்வு முறையினை விவரி.

(அல்லது)

(b) சமுதாயச் சித்தரிப்பு என்பதனை விளக்கி வரைக.

37. (a) வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் பாடப்பொருளைத் தந்துரை.

(அல்லது)

(b) தாய்வழிச் சமூகம் (Matriarchal Society) குறித்து விளக்குக.

38. (a) மூல உருக்கள் பற்றிய ஆய்வினைத் தருக.

(அல்லது)

(b) பின்னை அமைப்பியலில் கட்டவிழ்ப்பு பெறும் இடத்தினை ஆய்க.

39. (a) நவீனத்துவம் என்ற கோட்பாட்டினை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) எடுத்துரைப்பில் திறனாய்வின் இரண்டு முறைகள் யாவை?

40. (a) பின்னக் காலனித்துவ இலக்கியத் திறனாய்வு - விளக்குக.

(அல்லது)

(b) புலம்பெயர் படைப்புக்களின் உள்ளடக்கத்தினை விரித்துரை.

---

| N–0057 |
|---|

| Sub. Code |
|---|
| 205111 |

**M.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**Tamil**

இக்கால இலக்கியம்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours    Maximum : 75 Marks

பகுதி அ    (33 × 1 = 33)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பாரதியின் முதல் பாடலானத் ‘தனிமை இரக்கம்’ வெளியான இதழ்

   (a) இந்தியா    (b) நவசக்தி

   (c) விவேகபாநு    (d) சுதேசமித்ரன்

2. பாரதியின் குறுங்காப்பியங்கள்

   (a) கண்ணன் பாட்டு    (b) குயிற்பாட்டு

   (c) மகாபாரதம்    (d) முதல் இரண்டும் சரி

3. தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பு என்று பாரதிதாசன் குறிப்பது

   (a) இருள் வந்ததை    (b) காலை புலர்வதை

   (c) மனித நிறங்களை    (d) பெண்களை

4. பாரதிதாசனின் படைப்புகளில் இல்லாத ஒன்று

(a) அகல்விளக்கு (b) குடும்ப விளக்கு

(c) தமிழ்ச்சியின் கத்தி (d) புரட்சிக்கவி

5. கறுப்பு மலர் என்பது

(a) இருட்டின் ஆத்மா (b) கட்டைக் கரி

(c) கறுத்த புன்னகை (d) அனைத்தும் சரி

6. புத்தனுக்காகப் பொன்னிழல்கள் விரிக்கும் ———— ஒரு பக்கம்.

(a) சிலுவைகள் (b) போதிகள்

(c) விளக்குகள் (d) மேகங்கள்

7. மூன்றடிக்குள் பதினேழு அசைகள் கொண்டது

(a) சென்ரியூ (b) ஹைக்கூ

(c) லிமரைக்கூ (d) தன்கா

8. விற்பனையில் வண்ணத்துப்பூச்சி துடிக்கிறது ————.

(a) பூச்செடி (b) அங்காடி

(c) சிறுமி உள்ளம் (d) எதுவுமில்லை

9. விடுதியில் தங்கியுள்ள பெண்ணின் அறைத்தோழியாய் வந்த அகதியின் ஊர் எது?

(a) காரைக்குடி (b) யாழ்ப்பாணம்

(c) சென்னை (d) கிராமம்

10. தூர் கவிதையில் வென்ற படை வீரனாய்த் தலைநீர் சொட்ட வந்தவர் யார்?

(a) அம்மா (b) முத்துகுமார்

(c) அப்பா (d) சிறுமி

11. அண்ணாவின் நாடகங்களில் ஒன்று

(a) சபாபதி (b) டம்பாச்சாரி

(c) வேலைக்காரி (d) சூர்ப்பனகை

12. வேலாயுத முதலியார் வீட்டு வேலைக்காரியின் பெயர்

(a) அமிர்தம் (b) சரசா

(c) ஆனந்தி (d) எவருமிலர்

13. ஜெயந்தனின் நினைக்கப்படும் நாடகத்தின் மொத்த அங்கங்கள்

(a) ஒன்று (b) இரண்டு

(c) மூன்று (d) ஐந்து

14. நினைக்கப்படும் நாடகத்தில் பத்திரிக்கைத் தர்மத்தினை எடுத்துரைப்பவர்

(a) மரகதம் (b) பரஞ்சோதி

(c) மருதநாயகம் (d) பரமேஷ்வரன்

15. தனிமனிதன் சிறுகதையை எழுதியவர்

(a) ஜெயந்தன் (b) புதுமைப்பித்தன்

(c) கல்கி (d) மு.வ.

16. புதுமைப்பித்தனின் இயற்பெயர் யாது?

(a) சொக்கலிங்கம் (b) ராமையா

(c) புத்தன் (d) விருத்தாச்சலம்

17. தி. ஜானகிராமனின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற படைப்பு

(a) மோகமுள் (b) சக்தி வைத்தியம்

(c) அம்மா வந்தாள் (d) நடந்தாய் வாழி காவேரி

18. தி. ஜானகிராமனின் சிலிர்ப்பு சிறுகதையின் மையக்கருவாய் விளங்குவது

(a) பாலியல் சிக்கல் (b) முதியோர்

(c) பதின்மர் காதல் (d) குழந்தை தொழிலாளி

19. கவிஞர் வைரமுத்து பெற்ற தேசிய விருதுகளின் எண்ணிக்கை

(a) நான்கு (b) இரண்டு

(c) ஆறு (d) ஐந்து

20. அபோய் அன்னும் அரபிச்சொல்லின் பொருள்

(a) போய் வாருங்கள் (b) அம்மா

(c) அண்ணன் (d) அப்பா

21. கோபல்ல கிராமத்திற்கு அருகில் உள்ள ஊர்

(a) திருநெல்வேலி (b) கயத்தாறு

(c) வெண்மணி (d) மூவர் கோவில்

22. கி. இராஜநாராயணன் கதைகளில் அமைந்துள்ள வட்டாரம்

(a) நாஞ்சில் (b) கரிசல்

(c) செம்மண் (d) கொங்கு

23. நாவல் பேரரசி என அழைக்கப்பட்டவர்

(a) சாந்திமதி (b) லட்சுமி

(c) கனிமொழி (d) அனுராதா ரமணன்

24. அனுராதா ரமணன் எழுதிய சிறையின் முதன்மைக் கதாப்பாத்திரம்

(a) பாகீரதி (b) ரகுபதி

(c) ரமணி (d) அமுதா

25. திரு.வி.க. தொடங்கிய இதழின் பெயர்

(a) திராவிடன் (b) தேசபக்தன்

(c) நவசக்தி (d) இந்தியா

26. முருகனை வழிபடுவோர் அறுக்க வேண்டிய ஒன்று

(a) பந்தம் (b) முனைப்பு

(c) அவா (d) உறவு

27. சி. கல்யாணசுந்தரம் கவிதைகளைப் படைக்கப் பயன்படுத்தும் புனைப்பெயர்

(a) வண்ணதாசன் (b) புதுமைப்பித்தன்

(c) திரு.வி.க. (d) கல்யாண்ஜி

28. வண்ணதாசனின் அகமும் புறமும் என்பது ஒரு

(a) சிறுகதை (b) நாவல்

(c) நாடகம் (d) கட்டுரை

29. புதுக்கவிதைகளின் உத்திகளில் ஒன்று

(a) உள்ளுறை (b) இறைச்சி

(c) படிமம் (d) எதுவுமில்லை

30. பாரதியார் தமிழாக்கம் செயத் நூல்

(a) பகவத் கீதை (b) தாகூர் கவிதைகள்

(c) கண்ணன் பாட்டு (d) ஈழத்துக் கவிதை

31. இராஜராஜன் விருது பெற்ற ஜெயகாந்தனின் நாவல்

(a) உன்னைப் போல் ஒருவன்

(b) சுந்தர காண்டம்

(c) மரப்பசு

(d) அம்மா வந்தாள்

32. ‘சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைபறவை’ என்னும் சிறுகதைக்காக 2021ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற எழுத்தாளர்

(a) அம்பை (b) வைரமுத்து

(c) இமையம் (d) பாமா

33. கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப்படுபவர்

(a) வானமாமலை (b) கி. ராஜநாராயணன்

(c) வைரமுத்து (d) அம்பை

**பகுதி ஆ** $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) பாரததேசத்தின் பெருமைகளாகப் பாரதி உரைப்பனவற்றை எழுதுக.

(அல்லது)

(b) பெண்ணின் காலைக் கடமைகளாகப் பாரதிததாசன் யாது கூறுகின்றார்?

35. (a) அப்துல்ரகுமானின் இருபக்கங்கள் கவிதைப் பொருண்மையை விவரி.

(அல்லது)

(b) தீப்பற்றி எரியும் மரத்திற்கும் காற்றுக்குமான தொடர்பினை ஈரோடு தமிழன்பன் எவ்விதம் எடுத்துரைக்கின்றார்?

36. (a) நா. முத்துக்குமார், ‘தூர்’ கவிதையில் உணர்த்த வரும் செய்தி யாது?

(அல்லது)

(b) வேலைக்காரி நாடகமந்தர் வேதாசல முதலியாரின் பண்புநலன்களை விவரி.

37. (a) பிரபஞ்சனின் 'முட்டை' கதைச் சுருக்கம் தருக.

(அல்லது)

(b) கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் சிறுகதையின் மையக்கருவினை விளக்குக.

38. (a) சூர்யகாந்தன் ஒரு தொழிலாளியின் ஏக்கத்தினை எவ்வாறு புனைகிறார்?

(அல்லது)

(b) கரைந்தவர்கள் சிறுகதை உணர்த்தும் செய்தியினை விவரிக்க.

39. (a) கோபல்ல கிராமப் புதின மாந்தர்களின் சிறப்புப் பெயர்க்காரணங்களை விவரி.

(அல்லது)

(b) பெண்ணின் துணிச்சல் சமுதாயத்தை மாற்றவல்லது என்பதை அனுராதா ரமணனின் சிறைப் புதினம் கொண்டு விளக்கியுரைக்க.

40. (a) அழகு ததும்பும் இடங்களாகத் திரு. வி.க. சுட்டுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(b) வண்ணதாசனின் பனையோலை வியாபாரி என்னும் கட்டுரை உணர்த்தும் மையப்பொருளினை எடுத்துரைக்க.